<u>வாக்குமூலம்</u>

<u>குற்றவியல் நடுவர் நீதிமன்றம் , தென்காசி .</u>

<u>வழக்கு எண் : CC.No.493/2024</u>

<u>வழக்கு சாட்சி PW–3</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தாலுகா | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | சங்கரபாண்டி | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | கீழ குத்தப்பாஞ்சான் | வயது | 58 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 16.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது கீழ குத்தப்பாஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சாட்சி சண்முகவேல் என்பவரை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம் வருடம் நினைவில் இல்லை. என்னுடைய ஊருக்கு போலிசார் சீருடை இல்லாமல் வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ.3 மற்றும் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 21.08.2018 ம் தேதியன்று மாலை 06.00 மணிக்கு நானும், சாட்சி சண்முகவேல் என்பவரும் ராம் நகர் பஸ்ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த போது எங்கள் முன்னிலையில் எதிரி சஜியை போலிசார் விசாரித்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல அதன் அடிப்படையில் வழக்கின் சொத்தை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi